

தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகராட்சித் தலைவர் வனிதா நெப்போலியன் மீது அ.தி.மு.க. கவுன்சிலர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் தோல்வி அடைந்ததால் மீண்டும் கம்பம் நகர மன்றத் தலைவராக வனிதா நெப்போலியன் தொடர்ந்து நீடிப்பதால் ஊரக உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் உடன் இருந்தனர்.

# தமிழகத்தில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விருது!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரனிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, அக்.12-

தமிழகத்தில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 19.09.2025 அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் வழங்கப்பட்ட விருதினை சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்ற நிகழ்வு தொடர்பான குறிப்பு.

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையிலிருந்து மீண்டு வருகின்றன.

தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஒவ்வொரு ஆண்டும், தென்னிந்திய அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தேர்வு செய்து, விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. அவ்வாறு 2024-25 அரவைப் பருவத்தில், தமிழ்நாட்டில் இயங்கி வரும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தென்னிந்திய அளவில் விருதுகள் பெற்று சாதனை படைத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

**சர்க்கரை ஆலை - விருது விவரம் - பரிசு விவரம்**

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - தொழில்நுட்ப செயல்பாடு - முதல் பரிசு (பிளாட்டினம் விருது)

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - கரும்பு அபிவிருத்தி - இராண்டாம் பரிசு (தங்க விருது)

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம்- கரும்பு அபிவிருத்தி - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவள்ளூர் மாவட்டம் - தொழில் நுட்ப செயல்பாடு - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

19.09.2025 அன்று அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கான விருது மற்றும் சான்றுகள் வழங்கப் பட்டது. விருதுகள் பெற்ற சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் விருது மற்றும் சான்றுகளை சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் அவர்களிடம் 08.10.2025 அன்று காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வி. தட்சிணாமூர்த்தி, மற்றும் சர்க்கரைத் துறை இயக்குநர், டி. அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## காவல் கண்காணிப்பாளர் எம்.சுதாகர் பரிசு பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, அக். 12-

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. காவல் கண்காணிப்பாளர் முனைவர் எம்.சுதாகர் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு

39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜுலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

16.10.2025 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன் அவர்கள் முன்னிலை வகிக்கின்றார்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்தி வேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் எம்.சுதாகர் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் இல.குணசேகரன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன் ஆகியோர் செய்து வருகின்றனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் 08.10.2025 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் 101வது பிறந்தநாளையொட்டி, அன்னாரின் திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.விஜயன், மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், கே நவாஸ்கனி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் செ.முருகேசன், இராம.கருமாணிக்கம், திருமதி தமிழரசி ரவிக்குமார், பரமக்குடி நகர் மன்றத்தலைவர் சேது கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.

### மேலூர் தொகுதியில்

# 7600 கழக நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்!





மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 7600 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கரு தியாகராஜன், நேருபாண்டியன், ஆனந்த், முகமதுயாசின், ராஜராஜன், கிருஷ்ணமூர்த்தி, பழனி, அழகுபாண்டி, மருதுபாண்டியன், எம்.இளங்கோ, மீராஜான், தக்காக்குடி சரவணன், குமரேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

### "தொல்குடி" திட்டத்தின்கீழ் - ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில்

# பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு - வேளாண் இயந்திர தளவாடப் பொருட்கள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, அக். 12-

தொல்குடி திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு வேளாண் இயந்திர தளவாடப் பொருட்கள் ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "தொல்குடி ஐந்திணை" திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு முதற்கட்டமாக வேளாண் இயந்திரங்களை வழங்கி தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 'தொல்குடிஐந்திணை' திட்டத்தின் கீழ் பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (11.10.2025) மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பழங்குடியின விவசாயிகள் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அந்தவகையில், முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம் வருகையின் போது சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம் கிழக்கு பூர்வமலை பழங்குடியின விவசாயிகள் மேம்பாட்டு சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்தொடர்ச்சியாக கெங்கவல்லி வட்டம், வாழக்கோம்பை, மூக்காக் கவுண்டன் புதூர் மற்றும் சேலம் வட்டம், அடிமலைப்புதூர் ஆகிய பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் விவசாய சங்கங்களுக்கு இயந்திர தளவாடப் பொருட்கள் தொல்குடி திட்டத்தின் கீழ் ரூ.78.82 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக இன்றைய தினம், முதற்கட்டமாக மேற்படி பழங்குடியினர் விவசாய மேம்பாட்டு சங்கங்களுக்கு தற்போது 6 டிராக்டர்கள் மற்றும் 5 ரோட்டாவேட்டர்கள் இந்நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் மகேந்திரா டெக் ப்ளஸ், சாப் கட்டர், மகேந்திரா டிரேக்டர், நெல் வைக்கோல் சுருட்டும் இயந்திரம், பேட்டரி ஸ்பிரேயர், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், மினி டிரேக்டர், தீவன கலவை தாவரம் கலவை மற்றும் அரைத்தல், பாக்குத்தட்டு தயாரிக்கும் இயந்திரங்கள், தானியங்கள் அரைக்கும் இயந்திரம் ஆகிய இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ள விவசாய சங்கங்களை சேர்ந்த விவசாயிகள் இதனை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, பழங்குடியினர் நலன் (திட்ட அலுவலர்) திருமதி சுகந்தி பரிமளம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயி கள் கலந்து கொண்டனர்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி பரவை பேரூராட்சி 8வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் மாரியம்மாள் நாகராஜ் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், ஆர்.கணேசன், மனோகரன், ராசாமணி, அ.பா.ரகுபதி, ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், அன்புச்செல்வன், பாலசுப்பிரமணியன், துரை சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.